ADROIT
ADROIT PUBLIC RELATIONS PVT. LTD.
No. 5, Damodara Mudali Street,
Chetpet, Chennai - 600 031, India
Phone : 044-28362166, 28362543

| | |
|---|---|
| **Publication** | **Dina Malar** |
| **Date** | **07.03.2019** |
| **Edition** | **Tamil Nadu** |
| **Page No** | **02** |

# சென்னையில் சர்வதேச இன்ஜினியரிங் கண்காட்சி

சென்னை: இன்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரமோஷன் கவுன்சில் சார்பில், சென்னையில் சர்வதேச பொறியியல் செயலாக்க கண்காட்சி வரும் 14ம் தேதி முதல் 16ம் தேதி வரை 3 நாட்கள் நடைபெறவுள்ளது. இதுதொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், புரமோஷன் கவுன்சில் முதுநிலை துணைத்தலைவர் மகேஷ் தேசாய் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து முன்னணி பொறியியல் நிறுவனங்கள் இந்த 3 நாள் கண்காட்சியில் பங்கு பெறுகின்றன. உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத்துக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை எடுத்துக் காட்டும் வகையில் 'திறமையான பொறியியல்' என்பதே இந்த ஆண்டுக்கான மையக் கருத்தாகும். அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சித் துறை, கனரகத் தொழில்துறை, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை, தேசிய வடிவமைப்பு நிறுவனம் ஆகியவை கண்காட்சிக்கு உறுதுணையாக இருப்பதற்கு உறுதி அளித்துள்ளன. சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 400க்கும் அதிமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றனர்.

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையினருக்கு அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில், கண்காட்சி மூலம் மிகப்பெரிய வணிக ரீதியான ஒருங்கிணைப்பு ஏற்படும். புதிய தொழில்நுட்பங்களை தெரிந்துகொள்ள வாய்ப்பு உருவாகும். கண்காட்சியில் 130 குறு சிறு தொழில் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. ஜவுளி உட்பட எல்லா துறைகளில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. தமிழகத்தில் தொழில் தொடங்க பலரும் விரும்புகின்றனர். இது தமிழகத்துக்கு பெரிய பலமாக உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.